கிண்டி உயர் சிறப்பு மருத்துவமனை நிர்வாக செலவினத்துக்கு ரூ.20 கோடி

சென்னை, ஆக. 3: சென்னை கிண்டி கலைஞர் உயர் சிறப்பு மருத்துவமனையில் துப்புரவு-பாதுகாவல் சேவைகளை மேற்கொள்ள சுமார் ரூ.20 கோடி நிதியை மக்கள் நல்வாழ்வுத் துறை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதற்கான அரசாணையை மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் சுகன்தீப் சிங் பேடி வெளியிட்டுள்ளார்.

கிண்டியில் உள்ள கிங் ஆய்வக நிலையம் வளாகத்தில் ரூ.240 கோடியில் 1,000 படுக்கை வசதியுடன் கூடிய பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டப்பட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மொத்தம் 4.89 ஏக்கர் நிலப் பரப்பில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் 3 கட்டடங்களாக கட்டப்பட்ட அந்த மருத்துவமனையில் மருத்துவ உபகரணங்களை நிறுவும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

சிறுநீரகவியல், சிறுநீர்ப் பாதையியல், இதயவியல், உயிரி வேதியியல் ஆய்வகம் உள்ளிட்ட 20 மருத்துவத் துறைகள் அங்கு செயல்படவுள்ளன.

இந்த துறைகளில் பணியாற்றுவதற்காக பேராசிரியர், துணை பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் உள்பட மொத்தம் 133 மருத்துவர்கள், 372 செவிலியர்கள் என 757 பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், புறசேவை நிறுவனங்கள் (அவுட் சோர்சிங்) மூலம் துப்புரவு மற்றும் பாதுகாவல் பணிகளை மேற்கொள்வதற்காக நிர்வாக செலவினங்களுக்கு ரூ. 19.95 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு மருத்துவக் கல்வி இயக்கம் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதனைப் பரிசீலித்த மக்கள் நல்வாழ்வுத் துறை அதற்கு ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிட்டுள்ளது.

காச்சிகுடா – நாகர்கோயில் ரயில்: இன்றுமுதல் கூடுதல் பெட்டி

சென்னை, ஆக. 3: தெலங்கானா மாநிலம் காச்சிகுடா – நாகர்கோவில் இடையே இயங்கும் வாரந்திர சிறப்பு ரயிலில் வெள்ளிக்கிழமை (ஆக. 4) முதல் ஒரு குளிர்சாதன பெட்டி கூடுதலாக இணைக்கப்படுகிறது.

இது குறித்து தெற்கு ரயில்வே சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தெலங்கானா மாநிலம் காச்சிகுடா – நாகர்கோவில் இடையே இயங்கும் வாரந்திர சிறப்பு ரயிலில் (எண்: 07435/07436) வெள்ளிக்கிழமை (ஆக. 4) முதல் ஆக. 27-ஆம் தேதி வரை தற்காலிகமாக ஒரு குளிர்சாதன முதல் வகுப்பு பெட்டி கூடுதலாக இணைக்கப்பட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருவமழைக்கு முன்பு வடிகால் பணிகளை முடியுங்கள்

சென்னையில் நேரடி ஆய்வின்போது முதல்வர் உத்தரவு

சென்னை, ஆக. 3: சென்னையில் பருவமழைக்கு முன்பாகவே, மழைநீர் வடிகால் பணிகளை முடிக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் போரூர் ஏரி, அசோக் நகர் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை வியாழக்கிழமை அவர் ஆய்வு செய்தார்.

சென்னை மாநகராட்சி ஆலந்தூர் மண்டலத்துக்குள்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் ரூ.71.31 கோடியில் மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் 2.29 கி.மீ. தொலைவுக்கு மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, இதுவரை 1.78 கிமீ தொலைவுக்கு முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளை இந்த மாத இறுதிக்குள் முடிக்க வேண்டுமென ஆய்வின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

போரூர் ஏரியில் ரூ.100 கோடி மதிப்பில் புதிய மதகு அமைத்தல், ராமாபுரம் ஓடை வரை மூடப்பட்ட வடிவிலான கால்வாய் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளையும் அவர் நேரில் ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம், சென்னை மாவட்டங்களில் பருவமழைக் காலங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க, ரூ.250 கோடிக்கு பணிகளை மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதில், ரூ.100 கோடியில் இப்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோன்று, அசோக்நகர் 4-வது நிழற்சாலை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் ரூ.7.60 கோடியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார். இந்தப் பணிகள் அனைத்தையும் பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாகவே முடிக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, அமைச்சர்கள் க.பொன்முடி, தா.மோ.அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

ஆலந்தூர் மண்டலம், எம்ஜிஆர் சாலையில் ரூ.71.31 கோடியில் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் பணிகளை வியாழக்கிழமை ஆய்வு செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் க.பொன்முடி, தா.மோ.அன்பரசன், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) ஜி.எஸ்.சமீரன்.

இன்று மின் நுகர்வோர் குறைகேட்பு கூட்டம்

சென்னை, ஆக.3: எழும்பூர், ஆவடி மற்றும் பெரம்பூர் ஆகிய கோட்டங்களில் வெள்ளிக்கிழமை (ஆக.4) காலை 11 மணிக்கு மின் நுகர்வோர் குறைகேட்பு கூட்டம் நடைபெறும் என மின் வாரியம் தெரிவித்துள்ளது.

எழும்பூர்: எழும்பூர் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம், எண்.47, மலையப்பன் தெரு, எழும்பூர்.

ஆவடி: ஆவடி கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம், 1-ஆவது தளம், எண்.229, என்.எம். சாலை, ஆவடி.

பெரம்பூர்: பெரம்பூர் செயற்பொறியாளர் அலுவலகம்,எம்.இ.எஸ் சாலை, 110 கிலோ வோல்ட் செம்பியம் துணைமின் நிலைய வளாகம், பெரம்பூர் ஆகிய இடங்களில் மின் நுகர்வோர் குறைகேட்பு கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டங்களில் மின் நுகர்வோர் கலந்துகொண்டு குறைகளைத் தெரிவித்து நிவாரணம் பெறலாம் என மின் வாரியம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24 மணி நேர குடிநீர் விநியோகம்

வீடு தேடி வரும் களப் பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு தர மக்களுக்கு அறிவுறுத்தல்

சென்னை, ஆக. 3: சென்னை கோடம்பாக்கம், அடையாறு மண்டலங்களில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் திட்டச் செயலாக்கத்துக்கு தேவையான விவரங்களை சேகரிக்க, வீடு தேடி வரும் களப் பணியாளர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சென்னை குடிநீர் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

அந்த வாரியம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோடம்பாக்கம், அடையாறு மண்டலங்களில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோக திட்டச் செயலாக்கத்துக்கு தேவையான விவரங்களை, பொதுமக்கள் வீடு தேடி வரும் ஓடிஸா அரசின் நீர் நிறுவனத்தின் (வேட்கோ) பணியாளர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

இத்திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், ஓடிஸா மாநில நீர்க் கழகம் இடையே கடந்த 20-ஆம் தேதி மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் தயாரித்து வழங்கும் பணிகளை ஓடிஸா மாநில நீர்க் கழகத்தினர் மேற்கொள்வர். அதன்படி, பழுதடைந்துள்ள பழைய குடிநீர்க் குழாய்களை மாற்றியமைத்து, விடுபட்ட தெருக்களில் புதிதாக குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் மூலம், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு எண் 127 முதல் 142-க்குள்பட்ட கோடம்பாக்கம், வடபழனி, மேற்கு மாம்பலம், தியாகராயர் நகர், சி.ஐ.டி நகர், சைதாப்பேட்டை, ஜாபர்கான்பேட்டை, அசோக் நகர், கே.கே.நகர், எம்.ஜி.ஆர். நகர், நெசப்பாக்கம்(பகுதி), சாலிகிராமம், விருகம்பாக்கம், கோயம்பேடு ஆகிய பகுதிகள் மற்றும் அடையாறு மண்டலம், வார்டு எண் 168 முதல் 180-க்குள்பட்ட ஈக்காட்டுதாங்கல், சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், இந்திரா நகர், கிண்டி, அடையாறு, பெசன்ட் நகர், வேளச்சேரி, தரமணி மற்றும் திருவான்மியூர் ஆகிய பகுதிகளுக்கு தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்தி 24 மணி நேரமும் குடிநீர் தங்குதடையின்றி விநியோகிக்கப்படும்.

பொதுமக்கள் இத்திட்ட செயலாக்கத்துக்கு தேவையான விவரங்களை சேகரிக்க வீடு தேடி வரும் களப்பணியாளர்களிடம் அளித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு

சென்னை, ஆக. 3: நாடு முழுவதும் ஆக.15-ஆம் தேதி சுதந்திர தின விழா கொண்டாடப்படுவதை முன்னிட்டு, அசம்பாவிதங்களைத் தடுக்கும் விதமாக சென்னை விமான நிலையத்துக்கு 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்னைமீனம்பாக்கம்விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடு அதிகரிக்கப்பட்டு 5 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்துக்கு வரும் வாகனங்களை, பிரதான நுழைவு வாயில் பகுதியிலேயே நிறுத்தி, மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் மோப்ப நாய் உதவியுடன் சோதனை செய்து அனுப்புகின்றனர். வெடிகுண்டு நிபுணர்கள் வெடிகுண்டு கண்டறியும் கருவி மூலம் விமான நிலையத்தின் அனைத்து பகுதிகளையும் சுழற்சி முறையில் சோதனையிட்டு வருகின்றனர்.

முக்கிய பிரமுகர்கள் வருகைக்காக வழங்கப்படும் பாஸ்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்துக்குள் வரும் பயணிகளுக்கான சோதனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு பயணிகள் விமானம் புறப்படும் 1 மணி நேரத்துக்கு முன்னதாகவும், சர்வதேச பயணிகள் 3 மணி நேரத்துக்கு முன்னதாகவும் விமான நிலையத்துக்கு வர அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சரக்கு முனையத்திலும் பலகட்ட சோதனைக்கு பின்னரே சரக்குகள் விமானத்தில் ஏற்ற அனுமதிக்கப்படுகின்றன.

இந்தப் பாதுகாப்பு நடைமுறை ஆக.20-ஆம் தேதி நள்ளிரவு வரை அமலில் இருக்கும் எனவும், ஆக.13, 14, 15 ஆகிய தேதிகளில் உச்சக்கட்ட பாதுகாப்பான 7 அடுக்கு பாதுகாப்பாக அதிகரிக்கப்படும் எனவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

CONGRATULATIONS

CMA. DIVYA ABHISHEK
B.COM, MBA, LLB, ACMA, ACS, FCA, Dip IFR (ACCA), ADIT (CIOT UK)
Congratulations to
CMA. DIVYA ABHISHEK
on her election as the
YOUNGEST CHAIRPERSON OF SIRC OF THE INSTITUTE OF COST ACCOUNTANTS OF INDIA
(Statutory Body under an Act of Parliament)

NEW PRINCE SHRI BHAVANI SENIOR SECONDARY SCHOOL
(Affiliated to CBSE, New Delhi : Affi. No.:1930532)
No.27, Sabapathy Street, Ullagaram, Chennai - 600 091.
Inauguration of
MEDHA UTSAV '23
(Talent Festival)
Interschool Competition on 4th & 5th August 2023
Chief Guest
Thiru. HARIHARAN V S
Vice President Human Resources & Business Development
Edveon Technologies Private Limited
Thiru. K.LOGANATHAN Correspondent / Chairman
Tmt. V.S.MAHALAKSHMI Secretary
Tmt. L.ARCHANA Vice Chairperson
Thiru. L.NAVEEN PRASAD Vice-Chairman
Tmt.VEENA ILANGO Principal

refex
ரீஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: தரைத்தளம், பாஸ்கான் ஃபியூச்சுரா IT பூங்கா, பழைய எண்: 56L
புதிய எண்: 10/2, வெங்கட் நாராயணா சாலை, தியாகராய நகர், சென்னை - 600017
தொலைபேசி: +91-44-4340 5900 | இணையதளம்: www.refex.co.in
CIN எண்: L45200TN2002PLC049601
REFRIGERANT GASES | POWER TRADING | ASH & COAL HANDLING

2023 ஜூன் 30 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகளின் சாரம் [₹ லட்சத்தில்]

வ.எண்.	விவரங்கள்	தனித்து நிற்கும்				தொகுக்கப்பட்ட		
		முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		ஜூன் 30, 2023	மார்ச் 31, 2023	ஜூன் 30, 2023	மார்ச் 31, 2023	ஜூன் 30, 2023	மார்ச் 31, 2023	மார்ச் 31, 2023
		(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்பட்டது)
1	இயக்க செயல்பாடுகளிலிருந்து மொத்த வருவாய்	38,136.63	63,012.59	26,519.09	1,62,914.96	38,232.73	63,012.59	1,62,914.96
2	விதிவிலக்கான மற்றும் அசாதாரண உருப்படிகள் மற்றும் வரிகளுக்கு முந்தைய லாபம் / (இழப்பு)	3,010.51	6,763.41	1,896.24	15,663.63	2,938.67	6,763.13	15,663.35
3	வரிகளுக்கு முந்தைய லாபம் / (இழப்பு) (விதிவிலக்கான மற்றும் அசாதாரண உருப்படிகளுக்குப் பிறகு)	2,993.22	6,789.93	1,876.60	15,638.90	2,921.38	6,789.65	15,638.62
4	வரிகளுக்கு பிந்தைய லாபம் / (இழப்பு) (விதிவிலக்கான மற்றும் அசாதாரண உருப்படிகளுக்குப் பிறகு)	2,201.36	5,067.26	1,378.54	11,606.36	2,127.18	5,066.98	11,606.08
5	இக்காலாண்டுக்கான மொத்த விரிவான இலாபம் / (இழப்பு)	2,201.36	5,042.87	1,378.54	11,581.97	2,127.18	5,042.59	11,581.69
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் ஒவ்வொன்றும் ரூ.10/- என்ற முகமதிப்பை கொண்டது	2,210.70	2,210.70	2,100.20	2,210.70	2,210.70	2,210.70	2,210.70
7	கையிருப்புத் தொகை (மறுமதிப்பீடு கையிருப்புத் தொகையைத் தவிர்த்து)	NA	NA	NA	29,228.95	NA	NA	29,228.68
8	ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய்	9.96	22.92	6.56	53.90	9.62	22.92	53.89
9	ஒரு பங்கிற்கு நீர்த்த வருவாய்	9.92	22.88	6.56	53.84	9.59	22.88	53.84

குறிப்புகள்:
1. 2015, செபி (LODR) விதிமுறைகளின் விதி 33-ன் கீழ் பங்குச்சந்தையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும், 30 ஜூன் 2023-ஆம் தேதியன்று முடிவடைந்த காலாண்டுக்கான நிதிசார் முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமே மேற்கண்டதாகும். நிதிசார் முடிவுகளின் முழு வடிவமும் பங்குச்சந்தை வலைதளம் (www.bseindia.com & www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் வலைதளத்தில் (www.refex.co.in) கிடைக்கப்பெறுகின்றன.
2. நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 133-ன் கீழ், அறிவிக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகளின்படி (INDAS) நிறுவனத்தின் நிதிசார் முடிவுகள் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3. ஒப்பீடு நோக்கிற்காக தேவைப்படும் இடங்களில் எண்கள் மறுவகையாக்கம் / மறுகுழுவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.
4. மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிசார் முடிவுகளின் அறிக்கை, தணிக்கை குழுவால் மீளாய்வு செய்யப்பட்டு, 03 ஆகஸ்ட் 2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

A வருவாய் வளர்ச்சி Q1 FY23 - Q1 FY24 ~ 44% வளர்ச்சி
B EBITDA வளர்ச்சி Q1 FY23 - Q1 FY24 ~ 67% வளர்ச்சி
C Great Place To Work. Certified — ரீஃபெக்ஸ் - 'பணியாற்ற மிகச்சிறந்த இடம்' என GPTW-ன் சான்றிதழ் பெற்ற நிறுவனம்
D ESG 1,00,000 மரங்களை நடுவதற்கான 'ட்ரீஸ் ஃபார் லைஃப்' திட்டத்தை தொடங்கியிருக்கிறது

இடம்: மும்பை
தேதி: 3 ஆகஸ்ட், 2023
ரீஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திற்காக
அனில் ஜெயின்
நிர்வாக இயக்குநர்
DIN: 00181960
www.refex.co.in | Refex-Group | refex-group | @GroupRefex | refexgroup

HDFC BANK
ஹெச்.டி.எஃப்.சி பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம் : HDFC பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை – 400013.கிளை : முதல் தளம் ஐ.டி.சி. சென்டர், 760, அண்ணா சாலை, சென்னை – 600 002.
CIN L65920MH1994PLC080618
Website : www.hdfcbank.com.

விற்பனை அறிவிப்பு
(SALE BY PRIVATE TREATY)
இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்/கள் திரு. T. செந்தில் குமார் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிப்பது யாதெனில் SARFAESI சட்டத்தின் கீழ் தனி ஒப்பந்தத்தின் மூலம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள HDFC வங்கி லிமிடெட்டால் கையகப் படுத்தப்பட்டுள்ள (Physical Possession) சொத்தினை "எங்கு அமைந்துள்ளதோ அங்கு உள்ளது உள்ளபடி நிலையில்" விற்பனை செய்ய HDFC வங்கி லிமிடெட் உத்தேசித்துள்ளது. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கு விற்பனை விலையாக 14,10,000/- HDFC வங்கி லிமிடெட் பெற்றுள்ளது. இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு கூடுதலாக விலைகுறியீடு/ (கள்) பெறப்படாவிட்டால், விற்பனை மேற் குறிப்பிட்டுள்ள தொகைக்கு உறுதிப் படுத்தப் படும்.

சொத்து விவரம்
காஞ்சீபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, நந்திவாரம் கிராமம், புதிய சர்வே எண். 515/16 & 515/17 -ல் உள்ள 3275 ச.அடி நிலத்தில், சென்னை – 603202, கூடுவாஞ்சேரி, பங்கஜ அம்மாள் நகரில், மனை எண். 33 & 34 -ல் உள்ள விநாயகா ஹோம்ஸில் பிளாக் – ஏ-ல், ஃபிளாட் நெ.ஏ-3-ல், முதல் தளத்தில், 516 ச.அடி கட்டிடம் மற்றும் 259 ச.அடி பிரிபடாத பங்கு அளவுள்ள சொத்தில் மனை எண். 33 – ன் எல்லைகள். வடக்கு : லே – அவுட் ரோடு, தெற்கு : மனை எண்.34, கிழக்கு : 40 அடி லே – அவுட் ரோடு, மேற்கு : மனை எண். 32. மனை எண். 34 – ன் எல்லைகள் : வடக்கு : மனை எண். 33, தெற்கு : மனை எண். 35, கிழக்கு : 40 அடி லே – அவுட் ரோடு, மேற்கு : மனை எண்.32, தென் சென்னை மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது.
HDFC பேங்க் லிமிடெட்டிற்காக
ஒப்பம் – அதிகாரம் பெற்ற அதிகாரி

பொது அறிவிப்பு
இதன் மூலம் பொது மக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால்; எனது கட்சிக்காரர் பின்வரும் சுஜாதா சினி ஆர்ட்ஸ் (அட்டவணை சொத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி) நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தை வாங்க உத்தேசித்துள்ளார். மேலும் வாங்கிய பின்னர் முழு அட்டவணை சொத்தையும் கடன் வழங்குபவருக்கு கடனுக்கு ஈடாக அதாவது சர்வே எண்.430/1A1A, 430/1C மற்றும் 430/1B (பழைய சர்வே எண்.370/1A2, 370/1B, 370/1C, 370/1D, 370/1E, 370/2A2, 370/2C1, 370/2C2, 370/2E, 370/2F (பகுதி), 370/2G, 370/3C7, 311A மற்றும் 361A), அமைவிடம் எண்.27 (பழைய எண்.50 மற்றும் 56), காயரம்பேடு கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா மற்றும் மாவட்டம் (முன்பு காஞ்சிபுரம் மாவட்டம்), அமைவிடம் செங்கல்பட்டு பதிவு மாவட்டம், இணை-II செங்கல்பட்டு துணைப் பதிவு மாவட்டம். (இனிமேல் "அட்டவணை சொத்து" என்று குறிப்பிடப்படுகிறது) எனும் சொத்தினை அடமானம் செய்வதாக உத்தேசித்துள்ளார்.

அட்டவணை சொத்து

வ.எண்.	தற்போதைய உரிமையாளர்	சர்வே எண்கள்	பரப்பளவு (ஏக்கரில்)
1.	பிராவிடண்ட் ஹவுசிங் லிமிடெட்	430/1A1A	18.78
2.		430/1B	30.62
3.	சுஜாதா சினி ஆர்ட்ஸ்	430/1c	21.30
		மொத்தம்	70.70

மேற்படி அட்டவணை சொத்து மீது அல்லது அவற்றின் ஏதேனும் ஒரு பகுதி மீது எந்தவொரு நபருக்கேனும் அல்லது எந்தவொரு நிறுவனத்திற்கேனும் ஏதேனும் (a) கிரயம், பங்கு, விற்றல், வாங்குதல், கையகப்படுத்துதல், பாகப்பிரிவினை, உரிமை மாற்றம், புரிந்துணர்வு அறிக்கை, பரிமாற்றம், அடமானம், அடகு, ஈடு, பிணை, வில்லங்கம், தானம், அறக்கட்டளை, வாரிசு உரிமை, அடுத்த வாரிசு, சுவாதீனம், குத்தகை, உள் குத்தகை, வாடகை, பராமரிப்பு, ஈஸ்ட்மெண்ட், உரிமம், உயில், உயில் மூலமான கோரிக்கை, உரிமை ஒப்படைப்பு, கடன் தீர்க்க வேண்டிய பொறுப்பு, அட்டாச்மெண்ட், தீர்ப்பு உத்தரவு, எந்தவொரு நீதிமன்றத்தினாலும், ஆணையத்தாலும் வழங்கப்பட்ட தீர்ப்பு அல்லது உத்தரவு, மேம்பாட்டு உரிமைகள், பாதை உரிமைகள், வழக்கு நிலுவைகள், குடும்ப ஏற்பாடு/ செட்டில்மெண்ட், ஒதுக்கீடு அல்லது எந்தஒரு ஒப்பந்தம்/ உடன்பாடு/எழுத்துப்பூர்வம்/ ஆவணம் அல்லது இதர வகை பராதீனம், FSI/ FAR பயன்பாடு அல்லது எந்தஒரு கடன் பொறுப்பு அல்லது கடன் ஏற்பு அல்லது இதர வகை பொறுப்பு அல்லது எந்தவகை தன்மையுடைய கோரிக்கை அல்லது எந்தவொரு பொறுப்பு அல்லது கடமை அல்லது இதர வகையில் மேற்படி அட்டவணை சொத்து மீது அல்லது அவற்றின் ஏதேனும் ஒரு பகுதி மீது எந்தவொரு தன்மையுமுள்ள உரிமைக் கோரிக்கை எதுவும் இருக்குமானால் அல்லது உறுதிப்படுமானால் அல்லது (b) மேற்படி உரிமையாளர்களுக்கு எதிரான உரிமைக் கோரிக்கை எதுவும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 10 (பத்து) நாட்களுக்குள் தக்க சான்றாவணத்துடன் எழுத்துப்பூர்வமாக கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு எழுத்துப் பூர்வமாக தெரிவிக்குமாறு கோரப்படுகிறது. மேற்படி கால வரம்பிற்குள் ஏதேனும் உரிமைக் கோரிக்கைகளோ அல்லது ஆட்சேபணைகளோ பெறப்படாவிட்டால் அவை விட்டுவிடப்பட்டதாக/தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படும். அவை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவை எவ்விதத்திலும் என் கட்சிக்காரரைக் கட்டுப்படுத்தாது.
ஒம்/-
பிரபு மோகன்
ஷர்துல் அமர்சந்த் மங்கள்தாஸ் & கோ., வழக்கறிஞர்கள் மற்றும் ஆலோசகர்கள்
எண்.87/48, 2வது தளம், ASV சேமியர்ஸ் சதுக்கம், சேமியர்ஸ் சாலை, RA புரம், சென்னை-600028, இந்தியா
தொலைபேசி:+ 91 7338741126 மின்னஞ்சல்:pirabu.mohan@amsshardul.com

ENROLMENT NOTICE
After ten days of the publication of this notice and within THREE months there after I, SHALINI.T, W/o. M.KARTHIKEYAN, aged 32 years, permanently residing at No.6, Sri Sastha Nivas, Senthil avenue, Ponniammanmedu post, Chennai-600110.
Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar council Buildings, High Court Campus, Chennai-104.
Those who have any valid objections may Notify the same to the Bar Council within 10 days.
SHALINI.T

கடன் வசூல் தீர்ப்பாயம் - III சென்னை
5வது தளம், கடுதர் அலுவலக கட்டிடம், சாக்தீரி பவன், ஹாடோஸ் ரோடு, சென்னை-600006
T.A.எண்.1279 of 2023
ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, RASMECC கிளை, எண்.231, IIவது தளம், N.S.C.போஸ் ரோடு, சென்னை-600 001-ல் இருந்து சொத்து மீட்பு நிர்வாக கிளை, எண்.44, எல்டாம்ஸ் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-600 018-க்கு மாற்றப்பட்டுள்ளது. ...வாதி
மற்றும்
S.சிவரஞ்சனி, க/பெ.ராம்பிரசாத், எண்.7/12, அரவிந்தர் தெரு, விநாயகஷ்மிபுரம், அம்பத்தூர், சென்னை-600 020. ...பிரதிவாதி
பிரதிவாதிகளாகிய உள்ளவர்களுக்கு மாற்றுச் சேவையாக அனுப்பப்படும் சம்மன்.
மேற்குறிப்பிட்ட மனுதாரர், பிரதிவாதியாகிய உங்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித் தொகையான ரூ.25,79,272/-ஐ வசூலிப்பதற்காக தீர்ப்பாயம் முன்பாக மனு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிக்கு சாதாரண முறையில் அனுப்பப்பட்ட அழைப்பாணை/ அறிவிப்பில் விளைவு ஏதும் இல்லாததால் மாற்றுச் சேவையாக வழங்கும் படி மாண்புமிகு தீர்ப்பாயம் ஆணையிட்டதின் பேரில் இந்த அறிவிப்பு பத்திரிகையின் மூலம் வழங்கப்படுகிறது.
ஆகவே நீங்கள் 28/08/2023-அன்று காலை 11.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ மாண்புமிகு DRT-III, சென்னை முன்னிலையில் நேரிலோ அல்லது முறையாக வழிமுறைப் படுத்தப்பட்ட வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி உங்கள் தரப்பு வாதங்களை எழுத்துப்பூர்வமான அறிக்கையின் மூலமாக எடுத்துரைக்கலாம் என அறிவுறுத்தப் படுகிறீர்கள். தவறினால் மேற்படி வழக்கானது எதிர்வாதிகளாகிய நீங்கள் வராத நிலையில் சட்டத்தின் படி தீர்மானிக்கப்படும்.
26 ஜூலை 2023-அன்று எனது கையொப்பமும், முத்திரையும் இட்டு வழங்கப்பட்டது.
பதிவாளரின் கையொப்பம்